

உ

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ




இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த,

## செல்வன் கண்ணதாசன் ரஜந்தன் [அன்பு]

இறைபதம் குறித்த,

31ம் நாள் நினைவு

# அன்பு மலர்

29-09-2007

உ

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக



இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்**

**கண்ணதாசன் ரஜந்தன் (அன்பு)**

**இறைபதம் குறித்த 31ஆம் நாள்**
**நினைவு**

# அன்பு மலர்

**29.09.2007**

உ

சிவமயம்



# சமர்ப்பணம்

எம்மையெல்லாம் உன் அன்பால் கவர்ந்த
எங்கள் குல விளக்கே!
எங்கள் பாசக் குழந்தையே!
உன் பிரிவு ஆற்றாது
தவித்திடும் நாம் என்றுமே
உன் நினைவாய்
உன் பாதம் பற்றி
எம் கண்ணீரைப் பூக்களாக்கி
அர்ச்சனை செய்து
உன் திருவடிகளில்
இம் மலரினைச் சமர்ப்பணம்
செய்கின்றோம்.

குடும்பத்தினர்



உ

விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

மழலையாக
அன்னை மடியில்
25.06.1998

பாலனாக
பரமனடியில்
30.08.2007

அமரர்

# செல்வன் கண்ணதாசன் ரஜந்தன் (அன்பு)

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு சர்வசித்து திங்கள் சேர் ஆவணி பதின்மூன்றில்
துாண்டு பூரணை துதியை திதியும் கூடிய
நன்நாளில் கண்ணதாசன் ரஜந்தன் [அன்பு]
அடைந்தார் தப்பாமல் இறைகழல் சென்று



உ

சிவமயம்

நற்குஞ்சரக் கன்று நண்ணில் கலைஞானம்
கற்குஞ்சரக் கன்று காண்

- திருவருட்பயன் -

# பஞ்ச தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பண் - குறிஞ்சி

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன்றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின் னடியே மறவே னம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேல் மறவா வண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
செம்பொனே கம்பனே திகைத்திட்டேனே.

## திருவாசகம்

பண் - முல்லை

கடையவ னேனைக் கருணையினாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின் தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரானென்னைத் தாங்கிக்கொள்ளே

## திருவிசைப்பா

பண் - பஞ்சமம்

அல்லி யம்பூம் பழனத்தாமூர் நாவுக்கரசைச்
செல்ல நெறி வகுத்த சேவகனே தென்றில்லைக்
கொல்லை விடையேறி கூத்தாட ரங்காகச்
செல்வ நிறைந்த சிற்றம்பலமே சேர்ந்தனையே.

## திருப்பல்லாண்டு

பண் - சாளரபாணி

நிட்டையிலாவுட னீத்தென்னையாண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக் கென்னக நெகவூறுமமிர் தினிக்கலா நிழற்
பட்டனுக்கென்னைத் தன்பாற் படுத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே.

## திருப்புராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

## திருப்புகழ்

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகிலுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நினைந்திட் டுணர்வாலே
பரவுதரிசனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவுசங்கப் புலவோனே
சிவனருளு முருகசெம்பொற் கழலோனே
கருணைநெறி புரியுமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவுகந்தப் பெருமானே

## அபிராமி அந்தாதி

சுந்தரி எந்தை துணைவி என் பாசத் தொடரை எல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலை மேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத் தோன்
கந்தரி கைத்தலத்தான் மலர்தாள் என் கருத்தனவே.

## வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்நெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

திருச்சிற்றம்பலம்.





# சகலகலாவல்லி மாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கொன்டு கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவிநின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பீதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காய்யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமை
கொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொரு
கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந் தோய்புழைக்கை



நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும்விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.

திருச்சிற்றம்பலம்

# அன்பு ஆண்டவனிடம் சென்றாயே.....!

அன்பு அன்பு என்று எல்லோரும் கூப்பிடுகையில்
எங்கே நீ பறந்து சென்றாயடா
கடைக்குட்டியாய் நீ பிறந்து எங்களை விட ஏன் தான் முதலில்
பறந்து விட்டாயடா எம் வாழ்வில்
விளக்கேற்றிய அன்பே உன்னை நினைத்து, நினைத்து நாம்
கதறியழ பார்க்கும் இடமெல்லாம்
உன் அன்பு முகம் நிழலாட எம்மை விட்டு எங்கு தான்
சென்றாயடா வேதனையால் துடிக்கிறதே எம் உள்ளம் நோய்
மாறி வீடு வருவாய் என நினைத்து இருக்கையிலே பாவியவன்
பறித்தானோ உன் உயிரை
எம்முடன் வாழவிட விரும்பாத அந்த இறைவனிடம் மீண்டும்
மீண்டும் இறைஞ்சுகின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

## ஆத்திசூடி

**“ஆத்திசூடி அமர்ந்த தேவனை**

**ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே”**

1. அறஞ்செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டு ஒன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனி நீராடு
17. ஞயம்படி உரை
18. இடம்பட வீடு எடேல்
19. இணக்கம் அறிந்து இணங்கு
20. தாய் தந்தை பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர் செய்
23. மண் பறித்து உண்ணேல்
24. இயல்பலாதன செயேல்
25. அரவம் ஆடேல்
26. இலவம் பஞ்சில் துயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகு அலாதன செயேல்
29. இளமையில் கல்
30. அரனை மறவேல்
31. அனந்தல் ஆடேல்
32. கடிவது மற



33. காப்பது விரதம்
34. கிழமைப் படவாழ்
35. கீழ்மை அகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்பது ஒழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. சக்கர நெறி நில்
43. சான்றோர் இனத்திரு
44. சித்திரம் பேசேல்
45. சீர்மை மறவேல்
46. சுழிக்கச் சொல்லேல்
47. சூது விரும்பேல்
48. செய்வன திருந்தச் செய்
49. சேரிடம் அறிந்து சேர்
50. சை எனத் திரியேல்
51. சொல் சோர்வு படேல்
52. சோம்பித் திரியேல்
53. தக்கோன் எனத் திரி
54. தானமது விரும்பு
55. திருமாலுக்கு அடிமை செய்
56. தீவினை அகற்று
57. துன்பத்திற்கு இடங்கொடேல்
58. தூக்கி வினை செய்
59. தெய்வம் இகழேல்
60. தேசத்தோடு ஒத்துவாழ்
61. தையல் சொல் கேழேல்
62. தொன்மை மறவேல்
63. தோற்பன தொடரேல்
64. நன்மை கடைப்பிடி
65. நாடு ஒப்பன செய்
66. நிலையில் பிரியேல்
67. நீர் விளையாடேல்
68. நுண்மை நுகரேல்
69. நூல் பல கல்

70. நெற்பயிர் விளை
71. நேர்படி ஒழுகு
72. நொய்ய உரையேல்
73. நோய்க்கு இடம் கொடேல்
74. பழிப்பன பகரேல்
75. பாம்பொடு பழகேல்
76. பிழைபடச் சொல்லேல்
77. பீடு பெற நில்
78. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
79. பூமி திருத்தி உண்
80. பெரியாரைத் துணைக்கொள்
81. பேதமை அகற்று
82. பையலோடு இணங்கேல்
83. பொருள்தனைப் போற்றி வாழ்
84. போர்த்தொழில் புரியேல்
85. மனம் தடுமாறேல்
86. மாற்றானுக்கு இடங்கொடேல்
87. மிகைபடச் சொல்லேல்
88. மீதூண் விரும்பேல்
89. முனை முகத்து நில்லேல்
90. மூர்க்கரோடு இணங்கேல்
91. மெல்லினல்லாள் தோள் சேர்
92. மேன்மக்கள் சொல் கேள்
93. மைவிழியார் மனை அகல்
94. மொழிவது அற மொழி
95. மோகத்தை முனி
96. வல்லமை பேசேல்
97. வாது முற் கூறேல்
98. வித்தை விரும்பு
99. வீடு பெற நில்
100. உத்தமனாய் இரு
101. ஊருடன் கூடி வாழ்
102. வெட்டெனப் பேசேல்
103. வேண்டி வினை செய்யேல்
104. வைகறைத் துயில் எழு
105. ஒன்னாரைத் தேறல்
106. ஓரம் சொல்லேல்.



# கொன்றை வேந்தன்

**"கொன்றை வேந்தன் செல்வன் அடியினை**
**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே"**

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று
3. இல் அறம் அல்லது நல் அறம் அன்று
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
8. ஏவா மக்கள் மூவா மருந்து
9. ஐயம் புகினும் செய்வன செய்
10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு
13. அஃகமும் காகம் சிக்கனத் தேடு
14. கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை
15. காவல் தானே பாவையர்க்கு அழகு
16. கிட்டாதாயின் வெட்டென மற
17. கீழோராயினும் தாழ உரை
18. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
19. கூர் ஆயினும் வீரியம் பேசேல்
20. கெடுவது செய்யின் விடுவது கருமம்
21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
22. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
23. கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி
24. கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை
26. சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை
27. சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு

28. சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு
29. சீரைத் தேடின் ஏரைத் தேடு
30. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்
31. சூதும் வாதும் வேதனை தரும்
32. செய்தவம் மறந்தால் தைதவம் ஆகும்
33. சேமம் புகினும் யாமத்து உறங்கு
34. சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்
35. சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்
36. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவார்
37. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
38. தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை
39. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு
40. தீராக் கோபம் போராய் முடியும்
41. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்.
43. தெய்வம் சீறின் கைதவம் மாளும்
44. தேடாது அழிக்கின் பாடாய் முடியும்
45. தையும் மாசியும் வையத் துறங்கு
46. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
47. தோழனொடும் ஏழமை பேசேல்
48. நல் இணக்கம் அல்லது அல்லற் படுத்தும்
49. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
50. நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை
51. நீரகம் பொருந்திய ஊரகத்திரு
52. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி
53. நூன் முறை தெரிந்து சீலத் தொழுகு
54. நெஞ்சை ஒழித்து ஒரு வஞ்சகம் இல்லை
55. நேரா நோன்பு சீராகாது
56. நைபவர் எனினும் நொய்ய உரையேல்
57. நொய்பவர் என்பவர் வெய்யவர் ஆவர்
58. நோன்பு என்பது கொன்று தின்னாமை
59. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்



60. பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்
61. பிறன்மனை புகாமை அறம் எனத்தகும்
62. பீரம் பேணில் பாரந் தாங்கும்
63. புலையும் கொலையும் களவும் தவிர்
64. பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்
65. பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்
66. பேதமை என்பது மாதர்க்க அணிகலம்
67. பையச் சென்றால் வையந் தாங்கும்
68. பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்
69. போனகம் என்பது தான் உழந்து உண்ணேல்
70. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்
71. மாரி அல்லது காரியம் இல்லை
72. மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை
73. மீகாமன் இல்லா மலக்கலம் ஓடாது
74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
75. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
76. மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு
77. மேழிச செல்வம் கோழைப்படாது
78. மை விழியார்தம் மனை அகன்று ஒழுகு
79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
80. மோனம் என்பது ஞான வரம்பு
81. வளவன் ஆயினும் அளவு அறிந்து அழித்து உண்
82. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்
83. விருந்தில்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்
84. வீரன் கேண்மை கூர் அம்பாகும்
85. உரவோர் என்கை இரவாது இருத்தல்
86. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு
87. வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை
88. வேந்தன் சீறின் ஆம் துணை இல்லை
89. வைகல் தோறும் தெய்வம் தொழு
90. ஒத்த இடத்து நித்திரை கொள்
91. ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்

# எதிர்பாற் சொற்கள்

மக்கள் ஆண், பெண் என இருபாலாராக வகுக்கப்படுவர். அவர்களுள் ஆண்கள் விசேட சிறப்பு நோக்கி வெவ்வேறு ஆண்பாற் பெயர்களால் அழைக்கப்படுவர். இதே போன்று பெண்களும் அவ்வவற்றிற்கு ஒத்த பெண்பாற் பெயர்களால் அழைக்கப்படுவர். இவை **எதிர்பாற் சொற்கள்** எனப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| அரசன் | - அரசி | கோமான் | - கோமாட்டி |
| அடியான் | - அடியாள் | கொல்லன் | - கொல்லிச்சி |
| அழகன் | - அழகி | கோபாலன் | - கோபிகை |
| அப்பன் | - அம்மை | சகோதரன் | - சகோதரி |
| ஆயன் | - ஆய்ச்சி | சிறுவன் | - சிறுமி |
| ஆடவன் | - பெண்டு | சீமான் | - சீமாட்டி |
| ஆடூஉ | - மகடூஉ | செட்டி | - செட்டிச்சி |
| ஆண்டவன் | - ஆண்டவள் | சேவகன் | - சேவகி |
| இடையன் | - இடைச்சி | தட்டான் | - தட்டாத்தி |
| இந்திரன் | - இந்திராணி | தச்சன் | - தச்சிச்சி |
| இயக்கன் | - இயக்கி | தமிழன் | - தமிழிச்சி |
| இரவலன் | - இரவலள் | தனவான் | - தனவதி |
| ஈசன் | - ஈசுவரி | தனையன் | - தனையை |
| உத்தமன் | - உத்தமி | தாசன் | - தாசி |
| ஊரான் | - ஊராள் | திருவாளன் | - திருவாட்டி |
| எசமான் | - எசமாட்டி | திருடன் | - திருடி |
| ஐயன் | - ஐயை | தேவன் | - தேவி |
| ஒருவன் | - ஒருத்தி | தோழன் | - தோழி |
| கனவான் | - கனவதி | நம்பி | - நங்கை |
| காமுகன் | - காமுகி | நிபுணன் | - நிபுணை |
| காவற்காரன் | - காவற்காரி | பகவன் | - பகவதி |
| கிழவன் | - கிழவி,கிழத்தி | பண்டிதன் | - பண்டிதை |
| குறவன் | - குறத்தி | பத்தா | - பத்தினி |
| குமரன் | - குமரி | பரிசோதகன் | - பரிசோதகி |
| குரு | - குருத்தினி | பாங்கன் | - பாங்கி |
| குணவான் | - குணவதி | பின்னவன் | - பின்னவள் |
| கூனன் | - கூனி | | |



# எதிர்ப்பொருட் சொற்கள்

கொடுக்கப்பட்ட சொல்லின் எதிர்ப் பொருளைக் காட்டிவரும் சொற்கள் **எதிர்ப்பொருட் சொற்கள்** என அழைக்கின்றோம்

| | | | |
|---|---|---|---|
| அறம் | - மறம் | உபகாரம் | - அபகாரம் |
| அண்மை | - சேய்மை | உருவம் | - அருவம் |
| அன்பு | - வன்பு | உயர்வு | - தாழ்வு |
| அகங்கை | - புறங்கை | உலோபி | - வள்ளல் |
| அணு | - மலை | எளிது | - அரிது |
| அழுகை | - சிரிப்பு | எழுச்சி | - வீழ்ச்சி |
| அடைதல் | - அகலல் | ஏழை | - செல்வன் |
| அமுதம் | - ஆலம்(நஞ்சு) | ஏற்றம் | - இறக்கம் |
| ஆக்கம் | - கேடு | ஏகம் | - அநேகம் |
| ஆக்குதல் | - அழிக்குதல் | ஐது | - செறிவு |
| ஆதி | - அந்தம் | ஐயம் | - தெளிவு |
| ஆடவர் | - பெண்டிர் | ஒழுக்கம் | - இழுக்கம் |
| ஆத்திகன் | - நாத்திகன் | ஒற்றுமை | - வேற்றுமை |
| ஆக்கல் | - அழித்தல் | ஒறுப்பு | - மலிவு |
| ஆதரவு | - அநாதரவு | ஒளி | - இருள் |
| இகம் | - பரம் | கலக்கம் | - தெளிவு |
| இம்மை | - மறுமை | கற்றார் | - கல்லார் |
| இகழ் | - புகழ் | கனவு | - நனவு |
| இருள் | - ஒளி | காடு | - நாடு |
| இழிவு | - உயர்வு | காய் | - கனி |
| இசை | - வசை | காய்தல் | - உவத்தல் |
| இல்லறம் | - துறவறம் | காலம் | - அகாலம் |
| இளமை | - முதுமை | குணம் | - குற்றம் |
| ஈதல் | - ஏற்றல் | குனிதல் | - நிமிர்தல் |
| ஈரம் | - உலர்வு | குரு | - சீடன் |
| உறக்கம் | - விழிப்பு | குறுக்கம் | - விசாலம் |
| உற்றார் | - அற்றார் | குறைவு | - நிறைவு |
| உதயம் | - மறைவு | குன்று | - குழி |
| உத்தமம் | - அதமம் | கூடுதல் | - பிரிதல் |

# ஒத்த பொருட் சொற்கள்

தரப்பட்டுள்ள சொல்லின் பல்வேறுபட்ட பொருளை அல்லது ஒரே பொருளை தருகின்ற வேறு சொற்கள் **ஒத்த சொற்கள்** ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| அகிலம் | - ஞாலம், பூமி | ஞானம் | - அறிவு, தெளிவு |
| அமர்தல் | - இருத்தல் | வேழம் | - யானை |
| அடவி | - காடு, வனம் | வெளவுதல் | - அபகரித்தல் |
| அரமியம் | - நிலாமுற்றம், உட்பரிகை | விநயம் | - பணிவு, கட்டளை |
| | | கூன் | - வளைவு |
| அழல் | - நெருப்பு | மடந்தையர் | - மகளிர் |
| ஆழி | - கடல், சக்கரம் | விரோதம் | - பகை |
| ஆசனம் | - இருக்கை | வர்க்கம் | - இனம் |
| ஆர்வம் | - நாட்டம் | வடம் | - கயிறு |
| ஆசை | - விருப்பம்,இச்சை | மாசு | - குற்றம் |
| ஆதரவு | - அன்பு, அரவணைப்பு | அற்றார் | - இல்லாதார் |
| | | வெஞ்சினம் | - அதிககோபம் |
| ஆதவன் | - சூரியன், பரிதி | பொறி | - இயந்திரம் |
| இலக்கு | - குறி, குறிக்கோள் | தட்பம் | - குளிர் |
| இருடி | - முனிவர் | சீடர் | - மாணாக்கர் |
| இறும்பூது | - பெருமிதம் | கரணம் | - செயல் |
| உரத்து | - பலமாக | பாடலம் | - குதிரை |
| உத்தரவு | - அனுமதி | உதரம் | - யுத்தம், வயிறு |
| ஊறு | - கம்பிரம் | தாரகை | - நட்சத்திரம், உடு |
| எழில் | - அழகு, இளமை | கடினம் | - வன்மை |
| ஏளனம் | - இகழ்தல் | போலி | - பொய், பிரதிமை |
| ஏமம் | - இன்பம்,மயக்கம் | பாராட்டுதல் | - புகழ்தல் |
| ஐயம் | - பிச்சை,சந்தேகம் | கிளை | - கொம்பு, சுற்றம் |
| ஒலி | - சத்தம், அரவம் | நாண் | - கயிறு, நாணம் |
| ஒக்கல் | - உறவினர், சுற்றம் | மகிழ்ச்சி | - உவகை |
| ஒப்படைத்தல் | - கையளித்தல் | பிசகுதல் | - தவறுதல் |
| ஔதாரியம் | - பெருங்கொடை | பயிலுதல் | - கற்றல் |
| கடினம் | - வன்மை | பொதி | - பொட்டணம் |
| சத்தியம் | - உண்மை,வாய்மை | பொறை | - பொறுமை |
| சக்கரம் | - ஆழி, சில்லு | போர் | - யுத்தம், சமர் |
| சால்பு | - நற்குணம்,மேன்மை | பார் | - பூமி, அவனி |



# ஒரு பொருள் பன்மொழி

ஒரு பொருளைக் குறிக்கின்ற பல சொற்கள் **ஒரு பொருள் பன்மொழி** எனப்படுகிறது.

| | |
|---|---|
| அழகு | - வடிவு, வனப்பு, சுந்தரம், அணி, கவின், எழில், முருகு |
| அரசன் | - அண்ணல், இறை, காவலன், கொற்றவன், கோ, பதி, வேந்தன், மன்னன் |
| ஆபரணம் | - அணி, ஆரம், நகை, மணி, இழை, பூண் |
| ஆற்றல் | - வலிமை, வல்லமை, உரம், சக்தி |
| இன்பம் | - உவகை, உவப்பு, களிப்பு, மகிழ்ச்சி |
| இரவு | - அல், இராத்திரி, கங்குல், நிசி |
| உடம்பு | - உடல், சரீரம், சடலம், மெய், மேனி, யாக்கை |
| உதயம் | - புலரி, வைகறை, விடியல் |
| ஒளி | - பிரகாசம், சோதி, கதிர், சுடர், காந்தி |
| களிப்பு | - ஆனந்தம், உவகை, உவப்பு, மகிழ்ச்சி |
| காற்று | - பவனம், மாருதம், ஊதை, கால், வளி |
| கடவுள் | - தெய்வம், ஆண்டவன், ஆதி, இறைவன், ஈசன், ஏகன், முதல்வன் |
| குற்றம் | - குறை, கேடு, ஏதம், மாசு, ஆசு, களங்கம், தவறு, பிழை, புரை, வசை, வடு, இழுக்கு |
| சந்திரன் | - உடுபதி, அம்புலி, நிலவு, பிறை, மதி, சோமன், திங்கள் |
| சூரியன் | - பரிதி, ஞாயிறு, இரவி, அருக்கன், ஆதவன், பகலவன், தினகரன், வெய்யோன் |
| பூமி | - அகிலம், காசினி, குவலயம், ஞாலம், தரணி, பார், புவனம், புவி, பூமண்டலம், வையம் |
| பெண் | - அணங்கு, அரிவை, காரிகை, கோதை, தையல், நாரி, மாது, பாவை, பூவை, மங்கை, பேதை, மகடூஉ, வனிதை |
| பாம்பு | - அரவம், கட்செவி, சர்ப்பம், பணி, மாசுணம் |
| பொய் | - இழுக்கு, தப்பு, தவறு, படிறு, கிருத்திரமம் |
| மகன் | - குமாரன், சுதன், தனையன், புத்திரன், புதல்வன், மதலை |
| குதிரை | - பரி, அசுவம், மா, புரவி, கந்துகம் |
| புகழ் | - இசை, ஒளி, சீர், மேம்பாடு, கீர்த்தி |
| மேகம் | - முகில், கார், கொண்டல் |
| வீறு | - பெருமை, வேகம், உயர்ச்சி, வெற்றி, கருமமம் |
| மஞ்சு | - அழகு, மேகம், வலிமை, பனி, ஆபரணம் |

## தெரியாத செய்திகள்

1. படுத்து உறங்கத் தெரியாத மிருகம் – குதிரை
2. நிறவேறுபாடு தெரியாத மிருகம் – நாய்
3. பறக்கத் தெரியாத பறவை – பென்குவின்
4. குதித்து ஓடத் தெரியாத மிருகம் – யானை
5. கீழ்த் தாடையை அசைக்கத் தெரியாத விலங்கு – முதலை
6. பார்வை தெரியாத புகழ் பெற்ற கவிஞர் – மில்டன்
7. எழுதப் படிக்கத் தெரியாத ஸ்கொட்லாந்து கவிஞர் – பங்கன்மார்க்

## இல்லாத செய்திகள்

1. பறவைகளுக்குப் பற்கள் இல்லை
2. சுண்டெலிக்கு வியர்ப்பது இல்லை
3. பல்லி தண்ணீர் அருந்துவது இல்லை
4. எலிகள் இல்லாத நாடே இல்லை
5. ஒட்டகத்திற்குப் பித்தப்பை இல்லை
6. குயில்கள் குளிர்காலத்தில் கூவுவது இல்லை

## பலவகை அறிவு

1. ஓரறிவுள்ளவை – புல், மரம்
2. ஈரறிவுள்ளவை – நத்தை, சிற்பி, சங்கு
3. மூன்றறிவுள்ளவை – எறும்பு, கறையான்
4. நான்கறிவுள்ளவை – தும்பி, வண்டு
5. ஐந்தறிவுள்ளவை – மிருகம், பறவைகள்
6. ஆறறிவுள்ளவை – மனிதன்

## மனிதனது ஆறறிவுகள்

உணர்ந்தறிவு, சுவைத்தறிவு, பார்த்தறிவு, முகர்ந்தறிவு, கேட்டறிவு, பகுத்தறிவு.



## ஐந்தின் மகிமை

1. பஞ்ச உலோகம் – இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, பொன்
2. பஞ்ச இலக்கணம் – எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
3. பஞ்ச இரத்தினம் – சுகர்தி, பொன், முத்து, மாணிக்கம், மரகதம்
4. பஞ்சசீலம் – கொல்லாமை, கல்லாமை, காமமின்மை கள்ளுண்ணாமை, பொய்யாமை,
5. பஞ்சகௌவியம் – தயிர், நெய், பால், கோமயம், கோசலம்
6. பஞ்சகாவியம் – சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

## இயற்பெயர்

1. பாரதிதாசன் – சுப்புரத்தினம்
2. விவேகானந்தர் – நரேந்திரராததத்தர்
3. வீரமாமுனிவர் – கான்ஸ்டன்டின் ஜோசப்பெஸ்கி
4. வள்ளல் சீதக்காதி – அப்துல் காதிரு செய்யது
5. கிங்கொல் – எமிலி ஐயா

## நல்லதை எடுத்துக்கொள்

1. மலையளவு உபசாரம் செய்தாலும் கடுகளவு அபகாரம் செய்யாதே
2. தீயோனுக்கு நல்லோனாக இருந்தாலும் இரு நல்லோருக்கு மட்டும் தீயோராக இராதே
3. இரண்டு சுயநலவாதிகளுக்கு மத்தியில் ஒருபோது நலவாதி முட்டாளாகி விடுகிறான்.
4. அறிவாளி ஒருவன் கெட்டதயும் ஏற்று சிந்திக்கத் தொடங்குகிறான்.
5. பார்த்தவுடன் புரிந்து கொள்பவன் ஞானி பழகாமல் புரிந்து கொள்பவன் அறிவாளி பழகிப் புரிந்து கொள்பவன் ஏமாளி.
6. உன்னைவிட மேலானது எல்லா வகையிலும் உண்டு என்பதை மறக்காதே நானே எல்லாவற்றிலும் உயர்ந்தவன் என்பதை மறந்துவிடு.
7. ஏற்காதவனுக்கு அறிவுரை வழங்காதே அது உனக்கே ஆபத்தைக் கொண்டு வரும்.
8. பல வழிகளிலும் வருமானத்தைத் தேடும் ஒருவனால் தான் அநேகர் ஏமாற்றப்பட்டிருப்பார்கள்.

உ





# இதயம் கனிந்த நன்றிகள்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 30.08.2007 வியாழன் அன்று எங்கள் அன்பு உயிர் நீத்ததை அறிந்து உடன் வந்து உதவிய மனம் நிறைந்த நெஞ்சங்களுக்கும், அதனைத் தொடர்ந்து வீட்டில் நடை பெற்ற இறுதிக் கிரியையின் போது கலந்து கொண்டு மலர் மாலை, மலர் அஞ்சலி, கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்தும், உள் நாடுகளிலிலிருந்தும் தொலைபேசி மூலம் இரங்கல் தெரிவித்தவர்களுக்கும், யா/இணுவில் இந்துக் கல்லூரி சமூகத்தினருக்கும் பின்பு 27.09.2007 வில்லூன்றியில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியையில் பங்கு பற்றியவர்களுக்கும், இன்று 29.09.2007 சனிக்கிழமை வீட்டில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய, அன்புவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்து சிறப்பித்த அன்பு உள்ளங்களுக்கு எமது அன்பு கனிந்த நன்றிகள்

யஞ்சத்தடி,
இணுவில்

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# கீதாசாரம்

எது நடந்ததோத அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கிறதோத அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோத அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருக்கிறாய்த அது வீணாகுவதற்கு.

எதை நீ எடுத்துக் கொண்டாயோத அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோத அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோத அது நாளை மற்றொருவருடையதாகிறது.

மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

இந்த மாற்றம் உலக நியதியாகும்.





Pillaiyar
பராசக்தி பிரிண்டேர்ஸ்